# இயல் 7.7 - சதவீதமும் தனிவட்டியும்

பயிற்சி எண் :: 7.7.2.5.D

சதவீதமும் தனிவட்டியும் - மேற்சிந்தனைக் கணக்குகள் - தநாஅபு - பயிற்சி 2.5 14-16

Percentage & Simple Interest - Higher order Problems

## சதவீதமும் தனிவட்டியும் - மேற்சிந்தனைக் கணக்குகள் - தநாஅபு - பயிற்சி 2.5 14-16


14. ஒரு நபர் தனது பயணத்தை 80 கி.மீ மகிழுந்திலும் 320 கி.மீ தொடர்வண்டியிலும் மேற்கொள்கிறார் எனில், மொத்தப் பயணத்தில் அவர் மகிழுந்தில் பயணம் செய்த தூரத்தின் சதவீதத்தையும் தொடர்வண்டியில் பயணம் செய்த தூரத்தின் சதவீதத்தையும் காண்க.

அந்த நபர் பயணம் செய்த மொத்த தூரம் $= \underset{\text{மகிழுந்து}}{80} + \underset{\text{தொடர் வண்டி}}{320} = 400$ கி.மீ

மகிழுந்தில் பயணம் செய்த தூரத்தின் விகிதம் $= \dfrac{80}{400}$

மகிழுந்தில் பயணம் செய்த தூரத்தின் சதவீதம் $= \dfrac{80}{400} \times 100\% = \dfrac{80}{\cancel{400}_{4}} \times \cancel{100}^{1}\% = \dfrac{80}{4} = 20\%$

∴ தொடர்வண்டியில் பயணம் செய்த தூரத்தின் சதவீதம் $= 100\% - 20\% = 80\%$




மகிழுந்தில் பயணம் செய்த தூரம்

தொடர்வண்டியில் பயணம் செய்த தூரம்

∴ அந்த நபர் மகிழுந்து மற்றும் தொடர்வண்டியில் பயணம் செய்த தூரங்களின் சதவீதங்கள் முறையே **20%** மற்றும் **80%** ஆகும்.

15. இலலிதா என்பவர் தான் எழுதிய ஒரு கணிதத் தேர்வில் 35 சரியான பதில்களும் 10 தவறான பதில்களும் எழுதினார் எனில், அவர் அளித்த சரியான பதில்களின் சதவீதம் என்ன?


இலலிதா பதிலளித்த மொத்த வினாக்களின் எண்ணிக்கை $= \underset{\text{சரியாக பதிலளித்தவை}}{35} + \underset{\text{தவறாக பதிலளித்தவை}}{10} = 45$

∴ சரியாக பதிலளித்த வினாக்களின் விகிதம் $= \dfrac{35}{45}$

∴ சரியாக பதிலளித்த வினாக்களின் சதவீதம் $= \dfrac{35}{45} \times 100\% = \dfrac{\cancel{35}^{7}}{\cancel{45}_{9}} \times 100\%$ (5 - ஆல் வகுக்க)

$= \dfrac{7 \times 100}{9}\% = \dfrac{700}{9}\% = 77.78\%$

```
    77.7̅
 9 )700.0
    63
     70
     63
      7.0
      6.3
        7
```




சரியான பதில்கள்

தவறான பதில்கள்

∴ இலலிதா அளித்த சரியான பதில்களின் சதவீதம் **77.78%** ஆகும்.


16. குமரன் ஆண்டுக்கு 7 மாதங்கள் வேலை செய்கிறார் எனில், அந்த ஆண்டில் அவர் எவ்வளவு சதவீதம் வேலை செய்தார் என்பதைக் கணக்கிடுக.

குமரன் ஒரு ஆண்டில் வேலை செய்த மாதங்களின் விகிதம் $= \dfrac{7}{12}$

அவர் வேலை செய்த மாதங்களின் சதவீதம் $= \dfrac{7}{12} \times 100\% = \dfrac{700}{12}$

$= 58.33\%$

```
     58.3̅
 12 )700.0
     60
     100
      96
       4.0
       3.6
         4
```




வேலை செய்த மாதங்கள்

வேலை செய்யாத மாதங்கள்

∴ குமரன் வேலை செய்த மாதங்களின் சதவீதம் **58.33%** ஆகும்.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 21st September, 2022 :: 14:24 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted**. However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited**.